# திருவள்ளுவரும் விவேகானந்தரும்

இரா.காசிராசன்

இன்றைக்கு 2000-ஆண்டுகளுக்கு முன் எழுந்த உலகப் பொதுமறை திருக்குறள். இல்லறம் - துறவறம் இரண்டையும் சிறப்பிப்பது. அறவியல், பொருளியல், அரசியல், இன்பவியல் பற்றிப் பேசுவது. வீடுபேறு பற்றிய சிந்தனை இருந்தாலும், அதனைத் தனித்துப் பேசாத அறநூல் திருக்குறள். இதனால் தமிழரின் வாழ்வியல் அறம், பொருள், இன்பம் சார்ந்ததே என்பது போதரும். விவேகானந்தரின் சிந்தனையோ ஆன்மீகம் சார்ந்தது. பிரம்மச்சரிய நிலையில் மதங்களைக் கடந்த ஆன்மீக நிலையே விவேகானந்தர் பேசுவது. என்றாலும் அவரது சிந்தனை சமயப் பொதுமை சார்ந்ததன்று. அவரது சிந்தனை முழுக்க முழுக்க வேதச் சார்புடையது, இந்து சமயத்தைத் தூக்கிப் பிடிப்பது. ஆதிசங்கரர், இராமகிருஷ்ணர் ஆகியோரின் சிந்தனைத் தளத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்னும் ஆழமாகச் சிந்தித்தால், அவரது சிந்தனைத்தளம் ஆரியச் சார்புடையது என்பது புலனாகும். இத்தகைய ஒரு அடையாளத்தை வள்ளுவரிடம் காண முடியாது. சைன சமயச் சார்பு குறளின் வெளிப்பாடாக ஆங்காங்கே ஒளி வீசினாலும் அவரை அந்தச் சமயத்திற்குள் அடக்கிவிடமுடியாது.

வள்ளுவரின் கடவுள் கோட்பாடு இன்னும் புரியாத புதிர். அறம், பொருள், இன்பம் பற்றிப் பேசுகிறபோது அவரை உலகாயதவாதியாகக் காணலாம். கடவுள், மறுபிறப்புக்கோட்பாடு பற்றிப் பேசும் வள்ளுவரைப் புறச்சமயச் சிந்தனையாளராகக் குறிப்பிடலாம். ஆசிவகம், சார்வாகம், சாங்கியம் - பற்றிய சிந்தனைகளும் வள்ளுவரிடம் உண்டு. பரிமேலழகர் வள்ளுவரை வைதீக சமயத்தவராகக் காணுகிறார். மணக்குடவர் இதற்கு மாறான சிந்தனையுடையவர். இன்று வள்ளுவரைக் கிறிஸ்தவராகக் காணும் நிலையும் உண்டு. இத்தகைய பல்சமயச் சிந்தனையாளராக விவேகானந்தரை ஏற்க முடியாது. அவர் ஒரு வேத சிந்தனையாளர் என்பதே உண்மை.

அடுத்து வள்ளுவரின் கருத்தியல் ஆன்மீகம் மட்டும் சார்ந்ததன்று, அரசியல், சமூகம், சமயம், இல்லறவியல், துறவறம், அகம் - புறம் என அனைத்து மனிதநேயச் சிந்தனையும் வாழ்வியலும் அவர்தம் சிந்தனைக் களமாக அமைகின்றன. ஆயின் விவேகானந்தரின் சிந்தனை முழுக்க முழுக்கப் பிரம்மச்சரியம் சார்ந்தது, ஆன்மீகம் சார்ந்தது, இந்த வகையில் வள்ளுவரின் அறத்துப்பால் கருத்துக்கள் விவேகானந்தரிடம் காணப்படுகின்றன.

**கடவுள் கோட்பாடு:** கடவுள் கோட்பாட்டைப் பொருத்தவரை வள்ளுவரின் சிந்தனையோடு விவேகானந்தர் ஒரு வகையில் ஒப்புமையுடையவராகக் காணப்படுகிறார். ஆன்மாவே கடவுள் என்ற சிந்தனையே விவேகானந்தரிடம் மேலோங்கி நிற்கிறது. அவரது ராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய அனைத்திலும் இதன் வெளிபாட்டைக் காணலாம்.

ஒளியுடல் மூலமாகத் தூல உடலை இயக்குவது ஆன்மாவே, இந்த ஒளி உடலே மனத்தின் இருப்பிடம், ஆன்மா இதற்கு அப்பாற்பட்டது. ஆன்மா மனமும் அல்ல, அதுவே மனத்தை இயக்கி மனத்தின் மூலம் உடலை இயக்குகிறது. எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன். எல்லோருள்ளும் நான் இருக்கிறேன். எல்லா ஜீவராசிக்குள்ளும் நான் இருக்கிறேன். பிரபஞ்சமே நான்தான் என்று எப்போது மனிதன் உணர்கிறானோ அப்போதுதான் பயமற்ற நிலை வருகிறது. எல்லையற்றதாக இருக்கும். ஆன்மா மட்டுமே தனித்துவம் பெற்றது. எல்லையற்ற எதையும் துண்டுகளாக உடைக்க முடியாது. அது எப்போதும் ஒரே மாதிரியானது, இரண்டற்றது, அதுவே தனித்துவம் உள்ள மனிதன், உண்மையான மனிதன், உன்னால் என்னைக் கொல்ல முடியாது, பிறப்பு - இறப்பற்ற, எப்போதும் நிலைத்திருக்கின்ற சர்வ வல்லமை படைத்த எங்கும் நிறைந்த ஆன்மா நான். யாருடைய இதயத்தில் உண்மை இருக்கிறதோ, செயலில் தூய்மை இருக்கிறதோ, புலன்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் ஆன்மா தன்னை வெளிப்படுத்தும்.

இப்படிப் பலவிடங்களில், விவேகானந்தர் ஆன்மாவே கடவுள்; மகான்களுக்கே ஆன்மாவெளிப்பட்டு தோன்றும் என்கிறார். இங்கு மகாத்மாவான கிருஷ்ணன், அர்ச்சுனனுக்குக் கீதோபதேசம் செய்த குரலைக் கேட்கிறோம், நானே சத்தியமும்

ஜீவனுமாய் இருக்கிறேன் என்ற ஏசு கிருஸ்துவின் குரலைக் கேட்கிறோமம. இது எந்த ஒரு தனிக் கடவுளையும் குறிக்கவில்லை என்பது நோக்கத்தக்கது. இந்த வகையில் திருவள்ளுவரின் கடவுள் கேட்பாடு, எந்த ஒரு சமயத்தையும் சார்ந்ததாக இல்லை. விவேகானந்தர் இந்து சமயத்திலிருந்து, இதனை முன் வைக்கிறார். இத்தகைய எந்த ஒரு சார்பும் இன்றி, வள்ளுவர் தம் கடவுள் வாழ்த்தில், ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான் (எல்லோருடைய உள்ளக் கமலத்தில் ஏகினவன்), வேண்டுதல் வேண்டாமை இலான், இருள்சேர் இருவினையும் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண் குணத்தான் எனப் பேசுகிறார். இங்கு ஒரு மகாத்மாவான ஒரு ஆன்ம நிலை பெற்றவரையே இறை என்கிறார். மனிதனே – மாமனிதனே கடவுள் என்பது இருவரின் சிந்தனையாக அமைகின்றது. வள்ளுவர் கடவுள் மறுப்புக் கோட்பாட்டிலிருந்து இதனைத் தெளிவு படுத்துகிறார். இந்து, இந்து சமயம், இந்து சமயக் கோட்பாடு, பொதுவுடமையாக்கப்படவேண்டும், பின்பற்றப் பட வேண்டும், சைவ வைணவ போராட்டங்களிலிருந்து விடுபட்டு, இந்து சமயம் அமெரிக்கா முதலான மேலை நாடுகளில் ஏற்கப்பட வேண்டும் என்ற நிறுவன சமய அமைப்பின் பின்னணியிலிருந்து, மடங்கள் - மடாதிபதிகள் நிலையில் இருந்து இக் கருத்தை விவேகானந்தர் முன் வைக்கிறார் என்றே தோன்றுகிறது. இந்துத்துவக் கோட்பாடுகளும், இந்திய மடங்களும் மடாதிபதிகளும் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளின் நன்மதிப்பைப் பெறவும், மடாலயங்களின் வளர்ச்சிக்கு வித்திடவும், இத்தகைய பிரச்சாரங்கள் தேவைப்பட்டன. இந்த வகையான ஒரு பிரச்சார நோக்கமோ, பிறவோ வள்ளுவரிடம் இல்லை.∴

**கர்ம வினை (ஊழ் அல்லது வினைக் கோட்பாடு):** கர்ம யோகம் என்பதில் விவேகானந்தர், பிரம்மச்சரிய, ஆன்மீக நிலையிலிருந்து, வினைக் கோட்பாட்டை விளக்குகிறார். இதனை வள்ளுவர் உலகாயத நிலையிலிருந்து பார்க்கிறார். பரம்பரைக் கோட்பாடு புத்தரையும் ஏசுவையும் உருவாக்கவில்லை. அவரவர் கர்மத்தால் செயலால் நிச்சயிக்கப்படுகின்றன. உழைக்காமல் யாரும் எதையும் பெறமுடியாது, நமது செயல் தான் நமது இருப்பை நிர்ணயிக்கிறது. இனி எப்படி இருக்கவேண்டும் என்பதைச் செய்வதும் நமது செயலே. இப்போதைய நமது நிலைக்கு முன்வினைப் பயன் காரணம் எனின் எதிர்கால இருப்பு இப்போதைய செயலுக்கு ஏற்ப அமையும். பலன் கருதாது செய்யப்படுகின்ற செயலே இல்லை. என்றாலும் பலன் கருதாமல் சுயநலம் எதுவும் இல்லாமல் வேலை செய்வதே மிகுந்த பலனைத் தரும் அன்பு, உண்மை, சுயநலமின்மை இவை மிக உன்னத இலட்சியத்தை உருவாக்கும். சுயநல நோக்குடன் வெளியே செல்லும் ஆற்றல் யாவும் சிதறி வீணாகின்றன. செயல்புரிய மட்டும் நமக்கு உரிமை உண்டு. அதன் பலன்களில் அல்ல. பலன்களை அவற்றின் போக்கில் விட்டுவிடுங்கள்.

எந்தச் செயல் நம்மைக் கடவுளை நோக்கிச் செலுத்துகிறதோ அது நற்செயல், நமது கடமை. கீழ்நிலைக்கு இழுத்துச் செல்வது தீயது, அது நமது கடமை அல்ல. எந்தச் சமூகத்தில் பிறந்துள்ளோமோ அந்தச் சமுதாயத்தின் இலட்சியங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப நம்மை உயர்தவும் உன்னதப்படுத்தவும் உதவுகின்ற செயலே நமது கடமை. பிறருடைய பழக்க வழக்கங்களை ஒருபோதும் நமது சொந்த அளவுகோலால் மதிப்பிடக் கூடாது, நான் உலகின் அளவுகோலாக இருக்க முடியாது. நான்தான் உலகை அனுசரித்துப் போக வேண்டுமே தவிர உலகம் என்னை அனுசரித்துப் போகாது.

முடிவையும் வழியையும் ஒன்றாக்கு: நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் அந்த வேலைக்கு அப்பாலுள்ள எதைப்பற்றியும் சிந்திக்காதீர்கள். அந்த வேலையை மிக உயர்ந்த வழிபாடாக அந்த நேரத்திற்கு உங்கள் வாழ்க்கை முழுவதையும் அதில் செலுத்திச் செய்யுங்கள். பலன் கருதி வேலை செய்பவன்தான் தனக்கென்று வாய்த்த கடமை பற்றிக் குறைபட்டுக் கொள்வான். பலனில் பற்றில்லாதவர்களுக்கு எல்லா வேலையும் ஒரேபோல் நல்லவை தாம்: சுயநலத்தையும் புலன் இன்ப நாட்டத்தையும் அழித்து ஆன்ம சுதந்திரம் பெறுவதற்குத் தகுந்த கருவிகள்தாம். இப்படிக் கர்ம யோகம் எப்படிச் செய்ய வேண்டும் என்பது குறித்த விவேகானந்தரின் சிந்தனை வள்ளுவருக்குப் புதிதல்ல: பல அதிகாரங்களில் இதனை வள்ளுவர் உலகியல் நோக்கில் விளக்கிச் செல்கிறார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம், கருமமே கட்டளைக்கல் வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்: புகழொடு நன்றிபயவா வினை ஒழிதல் வேண்டும். ஒளி மாழ்கும் வினை தவிர்தல் வேண்டும். துன்பம் நேரினும் இழிசெயல் செய்யார் தெளிவுடையார். பின்தானே வருந்தும் செயல் செய்யற்க. சான்றோர் பழிக்கும் செயல் செய்யற்க வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்; பழுதுபடும் வினை செய்யற்க. ஆராய்ந்து செய்யத் துணிந்த வினையைத் தளராது செய்க; துன்பம் பாராது இன்பம் பயக்கும் வினை செய்க. எண்ணியர் திண்ணியர் ஆயின், எண்ணியாங்கு எய்துவர். இன்பம் விழையான், வினை விழைவான் துன்பம் துடைக்கும் தூண்; துன்பம் தருவன இவை என்று தன் அனுபவத்தில் அறிந்த எதையும் மற்றவருக்குச் செய்யாதிருத்தல் வேண்டும். நூல் அறிவினால் செயல்படும் காலத்திலும் உலகின் இயற்கை முறை அறிந்து அதனுடன் பொருந்திச் செயல்பட வேண்டும். இன்னும் வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினைசெயல்வகை எனப்பல அதிகாரங்களிலும் வினையாற்றும் திறனை வள்ளுவர் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கிறார். வள்ளுவர் பேசும் இவ்வினை செயல்வகை ஆன்மீகவாதிக்கன்றி அனைத்துலக மக்கட்கும் பொருந்தும் வகையில் காட்சிப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. ஆனால் விவேகானந்தரின் கருமவினை ஆன்மீக வாதிக்காகவே சொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

**ஈகை:** ஈத்துவத்துக்கும் இன்பம் பற்றி வள்ளுவர் கொடுப்பவன் - பெறுபவன் என இருமை நிலையில் பேசுகிறார். ஆனால் விவேகானந்தர் கொடுப்பவன் நிலையிலிருந்தே பேசுகிறார். உதவி பெற்றுக் கொள்பவன் அல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன். உங்கள் தானத்திறத்தையும் இரக்கத்தையும் இந்த உலகில் செயல்படுத்தி அதன் மூலம் நீங்கள் தூய்மையும் நிறை நிலையும் அடைவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக நன்றியுடையவர்களாக இருங்கள். எல்லா நற்செயல்களும் நம்மைத் தூய்மையை நோக்கி நிறைநிலையை நோக்கியே இட்டுச் செல்கின்றன. நாம் யாரோ ஒருவருக்கு உதவி செய்ததாக எண்ணி அவன் நமக்கு நன்றி பாராட்ட வேண்டும் என எதிர்பார்க்கிறோம். நாம் செய்பவற்றிற்கு ஏன் பிரதிபலனை எதிர்பார்க்க வேண்டும்? நீ உதவி செய்தவனிடம் நன்றி கொள். அவனைக் கடவுளாக எண்ணிக் கொள். பிராதியாக எதையும் எதிர்பார்க்காமல் கொடு. பண்டமாற்றுடன் கொடுக்காதே. நாம் எல்லோரும் தான் உலகிற்குக் கட்டுப்பட்டிருக்கின்றறோமே தவிர உலகம் எந்த வகையிலும் நமக்குக் கட்டுப்பட்டிருக்கவில்லை. உலகிற்கு உதவி செய்வதன் மூலம் உண்மையில் நமக்கு நாமே உதவி செய்து கொள்கிறோம். இப்படி உதவி செய்வது செய்தவன் நோக்கில் மட்டுமே விவேகானந்தரின் சிந்தனை அமைகிறது. உதவியைப் பெறுபவன் பற்றிப் பேச்சே அவரிடம் இல்லை.

வள்ளுவரோ இருநிலையிலும் ஈகை பற்றிப் பேசுவது அவரது உலகியல் சிந்தனையை-சமூகச் சிந்தனையைக் காட்டுகிறது. ஈத்து உவக்கும் இன்பம் அறியார் வன்கணவர் (கொடியவர்); மேல் உலகம் இல்லை எனினும் ஈதலே நன்று; அற்றார் அழிபசி தீர்த்தல்; பெற்றான் பொருள் வைப்புழி; பயன் கருதாது செய்யும் உதவி நயந்தூக்கின் நன்மை கடலினும் பெரிது; செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது; கைமாறு வேண்டாக் கடப்பாடு; என ஈவோன் நிலையில் ஈகையின் சிறப்பினைப் பேசுகிறார். அதே நேரத்தில் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்பதையும் - வறியாக்கு ஒன்று ஈவதே ஈகை; - சுட்டிக் காட்டுகிறார். அதே நேரத்தில் இரவு, இரவு அச்சம் அதிகாரங்களில, யாசிப்பதும் கூடாது என்கிறார் வள்ளுவர். நல்லாறு எனினும் கொளல் தீது, இலன் என்னும் எவ்வம்; இரத்தலின் இன்னாதது; இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்; என்று இரவாமை நன்று என்பதைக் கூறும் வள்ளுவர், நேர்மாறாக இரப்பதும் ஈகைபோல் இன்பம் தரும் என்கிறார். இன்பம் ஒருவர்க்கு இரத்தல்; இரப்பு ஓர் ஏர் உடைத்து; என்று கரவு உள்ளம் இல்லாரிடம் சென்று இரப்பது இன்பம் தரும் என்கிறார். அதேபோன்று, எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்நன்றி கொன்ற மகற்கு என ஒருவர் செய்த உதவியை மறப்பது இழிவு என்கிறார். இங்கு இரப்பதன் துன்பம், நல்லாரிடம் சென்று கேட்பது இன்பம், நன்றி மறப்பதன் தீமை-என வள்ளுவர் இரப்பவன் நிலையிலிருந்து பேசுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பரந்துபட்ட உலகியல் பார்வை – விவேகானந்திடம் இல்லை; அவரது நிறுவனச் சமய நோக்கு, கீதோபதேசப்போக்கு, ஆன்மீக நிலை- ஆகியவையே அவரது சிந்தனைப்போக்கில் அமைவதால். வள்ளுவரின் பரந்துபட்ட சிந்தனைப் போக்கை எட்ட

முடியாது போகிறது எனலாம். அதோடு மேல்நிலையாக்கச்சிந்தனை விவேகானந்தரிடம் இருப்பதும் இதற்குக் காரணம் எனலாம்.

பொதுநிலையில் நிறுவனச் நிறுவச் சமயங்கள்: பெருள்பெற்றுச் சமயங்களை வளப்படுத்தும் நோக்குடையன என்பது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் தாக்கம் கொடுப்பவன் நோக்கில் நின்று ஈகை பற்றி விவேகானந்தர் பேசுவதன் காரணம் எனலாம்.

**முயற்சி – தன்னம்பிக்கை:** எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவன் நாத்திகன் என்பது புதிய மதம்; கடவுள் நம்பிக்கை இல்லாதவன் நாத்திகன் என்பது பழைய மதம். நாடோ, மனிதமோ தன்னம்பிக்கை இழந்தவுடன் அழிகிறது. தெய்வநம்பிக்கை இருந்து தன்னம்பிக்கை இன்றேல் மோட்சம் இல்லை. நான் பலவீனமானவன்; மற்றவாகள் பலவீனமானவர்கள் என்று சொல்வதே பாவம்; இல்லை என்றோ, என்னால் இயலாது என்றோ ஒருநாளும் சொல்லாதே. உன்னிடத்தில் நம்பிக்கை வை. நீ சர்வவல்லமை படைத்தவன்; நீங்கள் கடவுளின் குழந்தைகள்; மனித இனத்தின் மீது சுமத்தப்படும் பழிச் சொல்லே நீங்கள் பாவிகள் என்பது. 1000 முறை தோல்வியுற்றாலும் மீண்டும் ஒருமுறை முயற்சி செய். வேதங்களின் சாரமே வலிமை; உண்மை ஒன்றுதான் வலிமை தருகிறது. உலக நோய்க்கு வலிமை ஒன்றுதான் சரியான மருந்து, வலிமைதான் வாழ்வு; பலவீனமே மரணம்; வெற்றிபெற விடாமுயற்சி செய்; கடுமையாக உழை; உனது குறிக்கோளை அடைவாய். உழைப்பே வடிவெடுத்த, சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்மகனையே திருமகள் நாடிச் செல்கிறாள். பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை இவையே நமக்குத் தேவை என்கிறார் விவேகானந்தர். இங்கு அவரது பிரச்சார நோக்கு வேத சமய ஈடபாடு, கிறிஸ்தவ சமயத்திற்கு எதிரான சிந்தனை (நீங்கள் பாவிகள்) புலப்படுகிறது. இத்தகைய சமயப் பிரச்சார நோக்கு வள்ளுவரிடம் காண்டல் அரிது.

ஊக்கம் உடையார் உடையார்: உள்ளம் உடைமை உடைமை; உள்ளத்தனையது உயர்வு; அசைவிலா ஊக்கம் உடையானிடம் ஆக்கம் தானே சேரும்; அவர் ஆக்கம் இழந்தேம் என்று அலமரார். அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும். முயற்சி திருவினை ஆக்கும்; முயற்சி இன்மை இன்மை புகுத்திவிடும். மடியுளாள் மாமுகடி என்ப, மடியிலான் தாளுளாள் தாமரையினாள்; ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்; தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன், மெய்வருத்தக் கூலி தரும். இவை வள்ளுவரின் சிந்தனைகள்; இவை எந்த மதச் சார்பும் இல்லாதவை; மனித நேய உலகியல் சிந்தனை.

இன்னும் வள்ளுவரின் புலனடக்கம், மனத்தூய்மை, இன்சொல் கூறல், அன்புடைமை, அவா அறுத்தல், அடக்கம் உடைமை, பணிவுடைமை, குற்றம் கடிதல், தவம், துறவு, அருளுடைமை, அறிவுடைமை, அறன் வலியுறுத்தல், இன்னா செய்யாமை, ஒழுக்கம் உடைமை, கண்ணோட்டம், கல்வி முதலான சிந்தனைச் தெளிவை விவேகானந்தரின் சிந்தனையுடன் ஒப்பிட்டுச் காண வாய்ப்புகள் நிறைய உண்டு.

**பார்வை நூல்கள்:**


1. ராஜயோகம், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ணா மடம், சென்னை.
2. பக்தி யோகம், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ணா மடம். சென்னை.
3. ஞான யோகம், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ணா மடம். சென்னை.
4. கர்ம யோகம், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ணா மடம். சென்னை.
5. ஆன்மிகச் சிந்தனைகள, சுவாமி விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ணா மடம். சென்னை.
6. விவேகானந்தரின் அறிவுரைகள், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீராமகிருஷ்ணா மடம். சென்னை.
7. விவேகானந்தர், பினாய் கே.ராய், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1984.